# நிதித் துறை

## கோரிக்கை எண். 16

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2016–2017

**ஓ. பன்னீர்செல்வம்**
**நிதி, பணியாளர் மற்றும் நிர்வாகச்**
**சீர்திருத்தத் துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2016

# பொருளடக்கம்


| தொடர் எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | கருவூலக் கணக்குத் துறை | 8 |
| 3. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | 23 |
| 4. | கூட்டுறவு தணிக்கைத் துறை | 46 |
| 5. | சிறு சேமிப்புத் துறை | 54 |
| 6. | அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் | 64 |
| 7. | அரசுத் துறை – நிறுவனத் தணிக்கைத் துறை | 70 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

# மானியக் கோரிக்கை எண்.16

# நிதித் துறை

# 2016–2017 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை:**

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று – 753

தமிழக அரசின் பொது நிதியை செம்மையான முறையில் நிருவகித்து ஒவ்வொரு ஆண்டும் அரசின் வரவு–செலவுத் திட்டத்தைத் தயாரித்து சட்டப் பேரவையில் தாக்கல் செய்வது இத்துறையின் முக்கியப் பணியாகும். மாநிலக் கருவூலத்தை பராமரிக்கும் நிதித்துறை, வரவுகளையும் செலவுகளையும் ஈடுசெய்து தேவைக்கேற்ப கடன் பொறுப்புகளை அளவோடு பராமரித்து நிதி நிர்வாகத்தை கவனிக்கும் ஒட்டுமொத்த பொறுப்பை வகிப்பதோடு, பெறப்பட்ட கடனை திரும்ப செலுத்தும்

பொறுப்பினையும் ஏற்றுள்ளது. பல்வேறு துறைகளின் தேவைக்கான செயற்குறிப்புகளை நிதித்துறை ஆராய்ந்து மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசின் நிதி நிலைக்கேற்ப, செலவுத் திறன் (cost effectiveness), நிதி நடைமுறை முதலியவற்றிற்கேற்ப கூர்ந்தாய்வு செய்து, தேவையை மதிப்பீடு செய்து வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்கிறது.

**தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் தொலைநோக்கும் குறிக்கோளும்**

**2.** தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023**யை செயலாக்கத்திற்கு கொண்டு வந்து மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான ஓர் அரிய முயற்சியை இவ்வரசு மேற்கொண்டுள்ளது குறிப்பிடதக்கது. தமிழ்நாட்டை இந்தியாவிலேயே வளமைமிக்க, முன்னேற்றம் செறிந்த, வறுமையில்லா மாநிலமாகவும், ஒரு நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் மக்கள் துய்த்து வருகின்ற மாநிலமாகவும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத சூழ்நிலையில் மக்கள் வாழ்கின்ற மாநிலமாகவும் உருவாக்குவதே **மாண்புமிகு முதலமைச்சர் செல்வி.ஜெ.ஜெயலலிதா** அவர்கள் வெளியிட்ட தமிழ்நாடு

தொலைநோக்குத் திட்டம் **2023**ன் முக்கிய நோக்கம் ஆகும். இக்குறிக்கோள்களை எய்திடும் பொருட்டு, **2023**ஆம் ஆண்டுக்குள், அனைவருக்கும் பயனளிக்கும் தரமான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இந்த அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

**3.** தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம் **2012**ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், நமது மாநிலத்தில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் செயல்படும் இந்த வாரியம், தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023–**ன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான திட்டமிடல், முறைப்படுத்துதல் மற்றும் திட்டங்களை முறையாக செயல்படுத்துதல் போன்ற பணிகளை நிறைவேற்ற உதவுகிறது. உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை இந்த வாரியம், ஒருங்கிணைப்பதோடு, அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு-தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்

திட்டங்களை செயல்படுத்தவும் உதவுகிறது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம்-2012, அதன் விதிகள்-2012 மற்றும் வரைமுறைகள்-2013 ஆகியவை, திட்டங்களை விரைவாக செயல்படுத்த வழிவகுக்கும் வகையில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு தேவையான நிர்வாக அதிகாரத்தை வழங்கியுள்ளதோடு தெளிவான நடைமுறைகளையும் நடவடிக்கைக்கான கட்டமைப்புகளையும் வரையறுத்துள்ளன.

**4.** பதினைந்து இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டில் மாநிலத்தின் முக்கிய கட்டமைப்புத் திட்டங்களை மேம்படுத்தும் நோக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தின் முதற்பகுதி 22.3.2012 அன்று வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 21.2.2014 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023** ஆவணத்தின் இரண்டாவது பகுதியை வெளியிட்டார்கள். துறைவாரியான அணுகுமுறைகளையும், ஆறு முக்கிய துறைகளில் மேற்கொள்ளப்பட உள்ள **217** உள்கட்டமைப்புத் திட்டங்களைப்

பற்றிய விவரங்களையும் இந்த ஆவணம் எடுத்துரைத்துள்ளது. தொலைநோக்குத் திட்ட ஆவணத்தின் திட்டங்களுக்கான ஆயத்தப் பணிகள் திட்டத்தயாரிப்பு நிதி மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றில் 88 திட்டங்கள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. 16 திட்டங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட உள்ளன. மேலும், 24 திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் மற்றும் விரிவான சாத்தியக்கூறு ஆய்வறிக்கைகள் தயார் செய்யப்பட்டு துவங்கும் நிலையில் உள்ளன. மீதமுள்ள திட்டங்கள் பல்வேறு தயாரிப்பு நிலைகளில் உள்ளன.

**5.** மேலும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், சென்னை மாநகரத்திற்கென அறிவுசார் போக்குவரத்து திட்டத்திற்கான (Intelligent Transport System), விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. மதுரை–தூத்துக்குடி தொழிலகப் பெருவழித் திட்டத்தையும் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒருங்கிணைத்து செயல்படுத்திவருகிறது. மதுரை–தூத்துக்குடி தொழிலகப் பெருவழி மேம்பாட்டுக்கழகம் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு இத்திட்டத்திற்கான நில

கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மதுரை–தூத்துக்குடி தொழிலகப் பெருவழிச்சாலை திட்டத்தை கிழக்குக் கடற்கரை பொருளாதார பெருவழிச்சாலையின் ஒரு பகுதியாக, கருதி உதவிட ஆசிய வளர்ச்சி வங்கி முனைப்பான ஆர்வம் காட்டிவருகிறது.

**6.** நமது நாட்டிலேயே ஒரு முன் முயற்சியாக, புதிய உள்கட்டமைப்பு நிதி அமைப்புகளுடன், உள்கட்டமைப்பு வசதிக் கடன் நிதியம் (Infrastructure Debt Fund), மாற்று முதலீட்டு நிதியம் (Alternative Investment Fund) (வகை–I) மற்றும் உள்கட்டமைப்பு முதலீட்டு பொறுப்பாண்மை நிறுவனம் (Infrastructure Investment Trust) ஆகியவற்றை கையாளும் வகையில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்தை மாநில அரசு நிறுவியுள்ளது. இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் இந்த நிதியம் பதிவு செய்யப்பட்டு, முதல் கட்டமாக **3000** கோடி ரூபாய் நிதியை திரட்டுவதற்கான நடவடிக்கைகளை தற்பொழுது மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகம், சொத்து பராமரிப்பு மேலாண்மை நிறுவனமாகச் (Asset Management Company) செயல்படும். தமிழ்நாட்டில் இது நான்காவது

தலைமுறை நிதி நிறுவனமாக இருக்கும். இது வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் புகழ்பெற்ற நிதி நிறுவனங்களின் நிதியுதவி பெற்று அமைக்கப்பட்டு வருகிறது. இந்தியா மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த வாய்ப்புள்ள முதலீட்டாளர்களிடமிருந்து பெறுகின்ற நிதிகளை அடிப்படையாக கொண்டு, இதன் நிதி ஆதாரம் திரட்டப்படும். இத்தகைய நிதி, அரசு–தனியார் பங்கேற்பு முறையில் அல்லது பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமான முறையில் (Engineering, Procurement and Construction mode) மேற்கொள்ளப்படும் பொதுத் திட்டங்களுக்கு கடன் வழங்குவதற்காகவும் முதலீடு செய்வதற்காகவும் பயன்படுத்தப்படும்.

**7.** தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் ஆகியவை தவிர நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் பின்வரும் ஏழு துறைகளும் இயங்கி வருகின்றன:–

(i) கருவூலக் கணக்குத் துறை

(ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(iii) கூட்டுறவு தணிக்கைத் துறை

(iv) சிறு சேமிப்புத் துறை

(v) அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

(vi) அரசுத் துறை – நிறுவனத் தணிக்கைத் துறை

(vii) ஓய்வூதிய இயக்ககம்

தொடர் எண் (i) முதல் (vi) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண்.50 "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களும்" குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

## கருவூலக் கணக்குத் துறை

**8.** கருவூலக் கணக்கு இயக்குநரை துறைத் தலைவராகக் கொண்டு கருவூலக் கணக்குத் துறை நிதித்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இத்துறையின் கீழ் இயங்கும் ஆறு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், ஆறு சம்பளக் கணக்கு அலுவலகங்கள், மூன்று சார்சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 32 மாவட்டக்

கருவூலங்கள், ஓர் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், ஓர் உதவி முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் **243** சார் கருவூலங்கள் ஆகியவை கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

## மின்–ஆளுகை முயற்சிகள்

### தன்னியக்க கருவூல பட்டியல் ஏற்பளிக்கும் முறை (ATBPS)

**9.** மாதாந்திரக் கணக்குகள் தயாரித்தல், பட்டியல்கள் கண்டறிதல் மற்றும் பட்டியல்களின் ஏற்பளிப்பினை கண்காணித்தல் போன்ற கருவூலச் செயல்பாடுகளில் உள்ள இடர்ப்பாடுகளைக் களையும் பொருட்டு சம்பளக் கணக்கு அலுவலகங்கள், மாவட்ட கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்களில் தன்னியக்க கருவூல பட்டியல் ஏற்பளிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு கணினி மற்றும் இதர உபகரணங்கள் வழங்குதல், குறும்பரப்பு வலையமைப்பு (LAN) மற்றும் தமிழ்நாடு அகன்ற வலையமைப்பு வசதிகள் (TNSWAN) ஏற்படுத்தித் தருதல், பணியாளர்களின் பணியிடச் சூழலை மேம்படுவதற்காக அலுவலகங்களை

நவீனப்படுத்துதல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் அரசின் கணக்கு முறைகளை துல்லியமாக கணக்கிடவும், சிறந்த கண்காணிப்புகளை மேற்கொள்ளவும் வசதியளிப்பதோடு, வங்கிகள், பணம் பெறும் அலுவலர்கள், மாநில கணக்காயர் ஆகியவர்களுக்கு தங்கள் பணியை திறம்பட செய்யவும் வழிவகுக்கும்.

**வலைதள சம்பள பட்டியல் (Web Payroll)**

**10.** இத்திட்டம், கருவூலக் கணக்குத் துறை அலுவலகங்களில் **2013–2014** ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது பிற துறை அலுவலகங்களிலும் விரிவுபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் வரவு செலவு திட்டப் பணிக்கென அரசுப் பணியாளர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த தரவுதளத்தின் (Centralized Database) மூலம் பணியாளர்களின் விபர எண்ணிக்கை, சம்பளம் மற்றும் அதைச் சார்ந்த பிற விவரங்களை பெறும் வகையிலும் வலைதள சம்பளபட்டியல் மென்பொருள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மனிதவள மேலாண்மைக்கு இத்திட்டம் ஒரு சிறந்த பயனுள்ள கருவியாக அமைந்துள்ளது.

## மின்னணு வழி ஓய்வூதியம் ( e-Pension)

**11.** இத்திட்டம் சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கருவூலங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் இதர பணப் பலன்கள் அவரவர் வங்கிக் கணக்கில் மின்னணு தீர்வை/மண்டல மின்னணு தீர்வை மூலம் (ECS/RECS) நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. அனைத்து ஓய்வூதியதாரர்களும் வரவு வைக்கப்பட்ட தங்களது ஓய்வூதிய விவரங்களை அவர்களின் வங்கி கணக்கில் இணையதளம் (online) மூலம் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (IF &HRMS)

**12.** நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட நடைபெற, நிதி மற்றும் மனிதவள மேலாண்மையை

இணைத்து ‘ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்’ நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூல பட்டியல் ஏற்பளிக்கும் முறை, வலைதள சம்பள பட்டியல் மற்றும் மின்னணு வழி ஒய்வூதியம் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, 288.91 கோடி ரூபாய்க்கு அரசு நிதி ஒப்பளிப்பு அளித்துள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு திட்ட ஒருங்கிணைப்பு நிறுவனமாக விப்ரோ நிறுவனம் (M/s.Wipro Limited) தெரிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தக் கூடிய அலுவலகங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கான பணிகளும் மென்பொருள் உருவாக்கும் பணிகளும் தற்சமயம் நடைபெற்று வருகின்றது. இத்திட்டம் பிப்ரவரி 2017இல் செயல்முறைக்கு கொண்டுவரப்படும்.

13. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம் முழுவதும் உள்ள 22,000க்கும் மேற்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் நேரடி இணையத்தின் மூலம் சம்பள பட்டியலை கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். மேலும்

இத்திட்டத்தில் அரசின் வருவாயினை இணையவழி மூலம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளதால், அரசின் நிகழ்நேர வரவினை உடனுக்குடன் பெற இயலும். இத்திட்டத்தின் மூலம் 9 இலட்சம் அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினிமயமாக்கப்பட்டு சம்பளப்பட்டியல், பதவி உயர்வு, மாறுதல்கள், விடுப்பு மற்றும் இதர விபரங்கள் அவ்வப்போது உடனுக்குடன் பதியப்படும். நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் எண்ம ஒப்பம் (Digital Signature) மற்றும் விரல்ரேகை பதிவுமுறை (Bio-Metric) மூலம் உறுதிப்படுத்துவது போன்ற பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் நிதி நிலை விபரம் உடனுக்குடன் அரசுக்கு கிடைப்பதுடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை நிர்வாகம் சிறப்பாக நடைபெற இது வழிவகுக்கும்.

**புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் – 2012 மற்றும் 2016**

**14.** புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்–2012, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீடு

நிறுவனம் மூலம் 01.07.2012 முதல் செயல்படுத்தப்பட்டு 30.06.2016 அன்று முடிவுற்றது. இத்திட்டத்தின் மூலம் அரசு அலுவலர்கள் மட்டுமின்றி உள்ளாட்சி அமைப்புகள், வாரியங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள், அரசு பல்கலைக் கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள்/நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுள்ள அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நான்காண்டுகளில் ரூபாய் நான்கு இலட்சத்திற்கு மிகாமல் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் மூலம் சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 113 வகையான மருத்துவ அறுவை சிகிச்சை முறைகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களுரு, திருவனந்தபுரம் மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் உள்ள **654** அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் **கட்டணமின்றி** மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து அதாவது 01.07.2012 முதல் 30.06.2016 வரை 731.27 கோடி ரூபாய் மதிப்பில் 1,85,781 பயனாளிகள் மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.

**15.** அரசு இத்திட்டத்தினை 30.06.2016க்குப் பிறகு மேலும் நான்காண்டிற்கு செயல்படுத்த நீட்டிப்பு செய்து ஆணையிட்டுள்ளது. இப்புதிய திட்டத்திலும், ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள காப்பீட்டுத் தொகையான **ரூபாய் நான்கு லட்சம்** வரை மருத்துவ சிகிச்சையினை கட்டணமின்றிப் பெறலாம். மேலும், இவ்வாணையில் புற்றுநோய், கல்லீரல் மற்றும் இதர உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள், திறந்த இருதய அறுவை சிகிச்சை, இருதய வால்வு மாற்று சிகிச்சை உள்ளிட்ட குறிப்பிட்ட சில சிகிச்சைகளுக்கு அனுமதிக்கப்படும் நிதியுதவி வரம்பு ரூ.7,50,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவித் தொகை ஒரு கண்ணிற்கு ரூ.25,000/- ஆகவும் கருப்பை நீக்க அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவித் தொகை ரூ.45,000/- ஆகவும் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விபத்து காரணமாக, இத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட சிகிச்சை / அறுவை சிகிச்சைகள் அவசரம் கருதி அங்கீகரிக்கப்படாத மருத்துவமனையில் மேற்கொண்டிருப்பினும், மருத்துவ உதவி நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக மாதம் ஒன்றிற்கு

ரூ.180/- வீதம் பங்கு தொகையாக சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து ஜுலை 2016 முதல் பிடித்தம் செய்யப்படுகிறது.

**ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்–2014**

**16.** ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 2014, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீடு நிறுவனம் மூலமாக 01.07.2014 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியம் பெறுபவர்களும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் வரையறுக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகளை பெற்று நான்காண்டுகளுக்கு (2014-2018) இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் மருத்துவ காப்பீட்டு உதவியாகப் பெறலாம். இதற்காக மாதம் ரூ.150/- வீதம் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் 60 அறுவை சிகிச்சைகள் மற்றும் 54 மருத்துவ நடைமுறைகள் உள்ளிட்ட 114 சிகிச்சைகள் அடங்கும். இதுவரை 655 மருத்துவமனைகள் இத்திட்டத்தின் கீழ் மருத்துவ உதவியினை வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 01.07.2014 முதல் 31.07.2016 வரை 283.55 கோடி ரூபாய் மதிப்பில் **99,317** பயனாளிகள் மருத்துவ சிகிச்சையினை **கட்டணமில்லாமல்** பெற்றுள்ளனர்.

**பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (CPS)**

**17.** இத்திட்டம், 01.04.2003 மற்றும் அதற்குப் பிறகு அரசுப் பணியில் சேர்ந்த அரசு அலுவலர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் அரசு பணியாளர்களிடமிருந்து அவர்களது அடிப்படை ஊதியம், தர ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு இவற்றில் 10 சதவீதம் மாதந்தோறும் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. அரசு ஊழியர்களின் பங்குத் தொகைக்கு நிகராக, அரசும் தனது பங்களிப்பு தொகையினை அவர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கில் செலுத்துகிறது. மேலும் பிடித்தம் செய்யப்பட்ட மாதத்திலிருந்து வட்டித்தொகை கணக்கிடப்பட்டு, பங்களிப்பு ஓய்வூதியத்திட்ட கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

## அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம் (NPS)

**18.** அரசாணை நிலை எண்.1155, பொது (சிறப்பு–பி) துறை, நாள் 08.12.2011இன்படி புதிய ஓய்வூதியத் திட்டம், 01.01.2004 மற்றும் அதற்குப் பிறகு பணியில் சேர்ந்த அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கென செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் அலுவலரின் கட்டாய பங்களிப்பாக அடிப்படை ஊதியம், தர ஊதியம், அகவிலை ஊதியம் மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றில் 10 சதவிகிதம் பிடித்தம் செய்யப்பட்டு அதற்கு இணையாக அரசின் பங்களிப்பும் செலுத்தப்படுகிறது.

**19.** தற்போது, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமும், புதிய ஓய்வூதியத் திட்டமும் அரசு தகவல் தொகுப்பு விவர மையம் மற்றும் கருவூலக் கணக்குத் துறையால் தேசிய தகவல் மையத்துடன் இணைந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கு புதிய ஓய்வூதிய திட்ட முகப்பு எண் (NPS Index Number) மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலர்களுக்கும் பங்களிப்பு ஓய்வூதிய திட்ட முகப்பு எண்

(CPS Index Number) அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தால் வழங்கப்பட்டு வருகிறது. 2015-2016ஆம் ஆண்டிற்கான அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கான கணக்கு விவர சீட்டு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இது தவிர ஏனைய அரசுப் பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதிய திட்டக் கணக்கு விவர சீட்டும் (Account Slip) வெளியிடுவதற்கான பணி மேற்கொள்ளப்பட்டு இணையதளத்தில் விரைவில் வெளியிடப்படவுள்ளது. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (CPS) மற்றும் புதிய ஓய்வூதியத் திட்டங்களை (NPS) நடைமுறைப்படுத்துவது குறித்தும் விடுபட்ட வரவுகள் உள்ளிட்ட அனைத்து பணிகளின் முன்னேற்றம் குறித்தும் கருவூலக் கணக்குத் துறை இயக்ககத்தால் தினம்தோறும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுடன் காலமுறையிலான கலந்தாய்வுக் கூட்டம், மாவட்ட அளவில், மாவட்ட கருவூல அலுவலர்கள் / சம்பளக் கணக்கு அலுவலர்களாலும் மாநில அளவில் கருவூலக் கணக்கு இயக்குநரால் சென்னையிலும் நடத்தப்பட்டு வருகிறது.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்**

**20.** இத்திட்டத்திற்கான நடவடிக்கைகளை அரசு தகவல் தொகுப்பு விவர மையம் மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்வதற்காக மாநில ஒருங்கிணைப்பு அலுவலராகவும் (State Nodal Officer) வகைநல்கு அலுவலராகவும் (Facilitator) கருவூல கணக்குத் துறை இயக்குநர் செயல்படுவார். உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து உள்ளாட்சி அமைப்புத் துறை அலுவலர்களோடு கருவூலக் கணக்குத் துறை இயக்குநர் ஆய்வு மேற்கொள்வதால் உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட செயல்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

**பங்களிப்பு ஓய்வூதியத்திட்ட இறுதித் தொகை வழங்குதல்**

**21.** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப்பேரவையில் 19.02.2016 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110-ன் கீழ் அறிவித்ததின்படி, அரசாணை நிலை எண்.59, நிதி (ஓ.கு.தீ)த் துறை, நாள் 22.02.2016–ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், பணித்துறப்பு

செய்தவர்கள், பணியிலிருக்கும்போது பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள், இறந்தவர்கள் ஆகியோர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத்திட்ட இறுதித் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், பங்களிப்பு ஓய்வூதிய திட்ட இறுதித் தொகை கோருவது சார்பாக 1366 விண்ணப்பங்கள் நாளது தேதி வரை கருவூலக் கணக்கு இயக்குநரகத்தில் பெறப்பட்டுள்ளன. இதுவரை 537 நபர்களுக்கு அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திலிருந்து பங்களிப்பு ஓய்வூதியத்திட்ட இறுதி கணக்குச்சீட்டுகள் பெறப்பட்டு, அதன் அடிப்படையில் பங்களிப்பு ஓய்வூதிய திட்ட இறுதி ஒப்பளிப்பு ஆணை (CPS final authorization) ரூ.18,86,65,946/-க்கு வழங்கப்பட்டுள்ளது.

**புதிய சார்–கருவூலங்கள் ஏற்படுத்துதல்**

**22.** “ஒரு வட்டம் – ஒரு சார்கருவூலம்” என்ற அரசின் கொள்கைக்கிணங்க கடந்த 2011 முதல் 2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் 37 புதிய சார்கருவூலங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு மொத்தம் 243 சார்கருவூலங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

## கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

**23.** சென்னை மாவட்ட கருவூல அலுவலகத்தைத் தவிர அனைத்து மாவட்ட கருவூல அலுவலகங்களும் அரசு கட்டடத்தில் தற்போது இயங்கி வருகின்றன. சென்னை மாவட்ட கருவூலத்திற்கு நந்தனத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்ட கருவூலங்கள் அனைத்தும் அரசுக்கு சொந்தமான கட்டடங்களிலேயே இயங்கும் நிலை விரைவில் உறுதி செய்யப்படும்.

**24.** மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 67 சார்கருவூலங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, அவற்றில் 34 சார் கருவூலங்களின் கட்டடப் பணிகள் முடிவுற்று பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. 30 சார் கருவூலங்களுக்கான கட்டடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் 3 சார் கருவூலங்களுக்கான நில மாற்றப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**25.** மேலும், நிதித்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் 10 அலுவலகங்களுக்கு 36.33 கோடி ரூபாய் திருத்திய மதிப்பீட்டு செலவில் ஒருங்கிணைந்த புதிய கட்டடம் கட்ட இவ்வரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்கட்டடப் பணி முடியும் நிலையில் உள்ளது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

**26.** அரசாணை (நிலை) எண்.125, நிதித் துறை, நாள்.10.02.1921ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை தோற்றுவிக்கப்பட்டது. மாநிலத்திலுள்ள நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக் கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட உள்ளூர் நூலக அதிகார மன்றங்கள் மற்றும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் சட்டபூர்வத் தணிக்கையானது, இத்தகைய நிறுவனங்களுக்குரிய சட்டவிதிகளின்கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**27.** மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்ளாட்சி அதிகார அமைப்புகள் மற்றும் பிற அதிகார

அமைப்புகள் மத்திய, மாநில அரசுகளின் மானியங்களை பயனுள்ள வகையில் செலவு செய்வதனை உறுதி செய்வதற்கும், பொது நிதியை இவ்வமைப்புகள் எவ்வாறு செலவு செய்கின்றன என்பதை கண்காணித்து மக்களிடையே அதன் நம்பகத்தன்மையை உயர்த்தவும், பதிமூன்றாவது மத்திய நிதிக் குழு மற்றும் இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படியும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 (த.நா.ச.எண்.24/2014) தமிழ்நாடு சட்டப்பேரவையால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கை மற்றும் இச்சட்டத்தின் பிரிவு 5ன்படி பிற நிறுவனங்களின் தணிக்கை, தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின்படியும், அதன்கீழ் இயற்றப்படவுள்ள விதிகளின்படியும், உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் மேற்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் செய்யப்படும் தணிக்கைக்கு இச்சட்டம், சட்டமுறை ஏற்பளிப்பு வழங்குகிறது. இது தவிர, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் தொகுக்கப்பட்ட ஆண்டு அறிக்கையினை, மத்திய தலைமை கணக்குத் தணிக்கைத்

தலைவரின் அறிக்கையுடன் சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கவும் இச்சட்டம் வழிவகை செய்துள்ளது.

**28.** இச்சட்டத்தை முறையாக செயல்படுத்த மாநில கணக்காயரின் அறிவுறுத்தலின்படி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அலுவலர்களுக்கு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் தணிக்கை அறிக்கையினை சமர்ப்பிக்க ஏதுவாக பயிற்சி அளிப்பது தொடர்பாகவும் தணிக்கை அறிக்கை வடிவத்தை மாற்றி அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**29.** இன்றைய நாளில் பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

| **தொடர் எண்** | **நிறுவனங்கள்** | **மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|
| (i) | மாநகராட்சிகள் | 12 |
| (ii) | நகராட்சிகள் | 124 |
| (iii) | பேரூராட்சிகள் | 528 |

| தொடர் எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| (iv) | மாவட்ட ஊராட்சிகள் | 31 |
| (v) | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| (vi) | பல்கலைக் கழகங்கள் | 23 |
| (vii) | உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள் | 32 |
| (viii) | மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுக்கள் | 21 |
| (ix) | தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் | 1 |
| (x) | வேளாண் விற்பனைக் கழக பொறியியல் பிரிவு | 2 |
| (xi) | கோயம்பேடு மொத்த விற்பனை குழு | 1 |
| (xii) | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 27 |
| (xiii) | கிராம ஊராட்சிகள் (சோதனை தணிக்கை மட்டும்) | 2515 |
| (xiv) | பல்வகை நிறுவனங்கள் | 10 |

**உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை**

30. உள்ளாட்சி அமைப்புகளின் வரவு செலவுகள், சட்டங்கள், விதிகள் மற்றும் அரசாணைகளின்படி உண்மை நிலையை பிரதிபலிக்கின்றனவா என்பதை உறுதி செய்யும் பொருட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கையின் தணிக்கைக் குழுக்கள், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்ப்பதுடன், தணிக்கை மேற்கொள்ளப்படும் நிறுவனங்களின் வருமானம் மற்றும் செலவினம் குறித்த தனியுரிமை தணிக்கையையும் (Proprietary Audit) மேற்கொள்கின்றன. மேலும் அரசு மற்றும் பிற நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் தொகை நன்முறையில் பயன்படுத்தப்படுவதையும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்க அந்த தொகைகள் எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அதே நோக்கத்திற்கு முறையாக செலவிடப்படுகிறதா என்பதையும், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உறுதி செய்கிறது.

**கிராம ஊராட்சி நிறுவனங்களின் சோதனை தணிக்கை**

31. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மூலமாக

முறைப்படியான தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கையில் **20** சதவீதம் சோதனைத் தணிக்கை மட்டும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, ஆண்டுதோறும் 2515 ஊராட்சிகள் இத்துறையால் தணிக்கை செய்யப்படுகின்றன. இத்துடன் கிராம ஊராட்சிகளின் உயரளவு வரவினங்கள் அல்லது மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவன ஆணையரால் அனுப்பப்படும் குறிப்பிட்ட புகார்களின் அடிப்படையில், இரண்டு சதவீத கிராம ஊராட்சிகளின் சோதனை தணிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

**நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் உடன் நிகழ் தணிக்கை (Concurrent Audit)**

**32.** தற்போது 12 மாநகராட்சிகளிலும், 17 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக் கழகங்களிலும் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோல் அனைத்து 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் 2000-2001ஆம் ஆண்டு முதல், உடன் நிகழ் தணிக்கை முறை

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி தெரிவு செய்யப்பட்ட 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓர் ஆய்வாளர் மற்றும் ஓர் துணை ஆய்வாளர் / உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டு தணிக்கைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை நடைமுறை (Immediate Post Audit)**

**33.** உடன் நிகழ் தணிக்கை செயல்படுகின்ற 12 மாநகராட்சிகளிலும் 17 நகராட்சிகளிலும் உடன்பின் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொகை வழங்கப்பட்டவுடன் செலவுச் சீட்டுக்கள் உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றன. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை நிருவாகத்தால் உடனுக்குடன் களைய இம்முறை வழிகோலுகிறது.

**34.** உடன்நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றுக்கு வரப்பெற்ற பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்த தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அவ்வாறு தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் குறித்து பெறப்படும் பதில்கள் சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு தணிக்கைக் குழுவினரால் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு, அதன் அடிப்படையில் தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யப்படுகின்றன.

**உடன் நிகழ் தணிக்கைக்குட்படாத பிற நிறுவனங்களின் ஆண்டுத் தணிக்கை**

**35.** உடன் நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 107 நகராட்சிகள், 9 பல்கலைக் கழகங்கள்,

ஏனைய உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணையக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் இயல்பாகச் சேரும் வருவாய் அடிப்படையில் (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்**

**36.** நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இயல்பாகச் சேரும் வருவாய் அடிப்படையில் கணக்கு வைப்பு முறை (Accrual based Accounting System) இரு கட்டங்களாக 1999–2000, 2000-2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து செயற்படுத்தப்பட்டுள்ளது. 2002-2003ஆம் ஆண்டு முதல் இந்த கணக்கு முறை பேரூராட்சிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**37.** ஓர் ஆண்டின் நிதி சார்ந்த நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account), ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் உண்மையான நிதிநிலையை அறிந்து கொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறை கோட்பாட்டின்படி தயாரித்து, கணக்குகளைப் பேணுவதே இந்த கணக்கு முறையின் நோக்கமாகும்.

**38.** இந்த நடைமுறையினால் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், உரிய மதிப்பீட்டு முறைகளோடு, கணக்குகளில் சேர்க்கப்பட்ட அவற்றின் சொத்துக்களை சொத்து பதிவேட்டின் மூலம் அறிந்துகொள்ள முடியும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் இந்த மேம்படுத்தப்பட்ட கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், மூலதன திட்டங்கள் மற்றும் நலத்திட்டங்களுக்கும் கடன் உதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதன் மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மூலதன மற்றும் நலத்திட்டங்களுக்கு நிதி திரட்டும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

**உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் ஆண்டு கணக்குகளுக்குத் தணிக்கை சான்று வழங்குதல்**

**39.** உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குவது மிகவும் முக்கியமான பணியாகும். மேலும் முறையான தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அர்த்தமற்றவை என்பது பன்னாட்டு அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். இதன்படி, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு, இத்துறையின் அலுவலர்களால் தணிக்கைச் சான்றளிக்கப்படுகின்றன.

**40.** பல்கலைக் கழக மானியக்குழு, மாநில / மத்திய அரசு மற்றும் ஏனைய நிதி அளிக்கும் நிறுவனங்களால் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட பல்கலைக் கழகங்கள் மற்றும் ஏனைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியுதவிகளை, பயன்படுத்தியதற்கான தணிக்கைச் சான்றிதழ்களும் இத்துறையினால் வழங்கப்படுகின்றன.

**தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை**

41. தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது கண்டறியப்படும் கடுமையான முறைகேடுகள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாக அதிகாரிகளின் கவனத்திற்கு உடனடியாக எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிதிக்கையாடல், பொது மக்களின் பணத்திற்கு ஏற்பட்ட இழப்பு போன்ற கடுங்குறைபாடுகள், மாதாந்திர கால முறை அறிக்கைகள் மற்றும் சிறப்பு அறிக்கைகள் மூலம் தொடர் நடவடிக்கையாக அரசுக்கும், நிர்வாகத் துறைத் தலைவர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

42. தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு, மெய்யான நேர்வுகளில் தணிக்கை மறுப்புரைகள் கைவிடப்படுகின்றன. மேலும் தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும் இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களாலும்

தணிக்கை மறுப்புரைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது. நிறுவனங்கள் தணிக்கையின் போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், அத்தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக் காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது.

**மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்**

**43.** ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. **2015–2016** ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான **84** உயர்நிலை குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, **2445** எண்ணிக்கையிலான தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டன.

**44.** பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராகக் கொண்டும், உயர்நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2015–2016ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 8 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 407 எண்ணிக்கையிலான தணிக்கை மறுப்புரைகள் மீது மாவட்ட உயர்நிலைக் குழுக்களால் முடிவெடுக்கப்பட்டன.

45. சென்னை நீங்கலாக உள்ள பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கான மாநில அளவிலான உயர் நிலைக் குழு, நகராட்சி நிருவாக இயக்குநரைத் தலைவராக கொண்டும், மாவட்ட அளவிலான உயர்நிலைக் குழு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களை தலைவராகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. 2015–2016 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 31 உயர்நிலை குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 29336 தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டன.

**சிறப்புப் பணிகள்**

46. வழக்கமான தணிக்கைப் பணிகள் தவிர கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## (i) உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பலன்கள் அனுமதித்தல் / வழங்கல்

**47.** நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு, சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 31.07.2016 அன்றுவரை 32,275 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் தாங்கள் உயிருடன் இருப்பதற்கான வாழ்வுச் சான்றிதழ் அளித்து, நான்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை, சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரகத்தால் பராமரிக்கப்படும் சம்பந்தப்பட்ட ஓய்வூதிய நிதியத்திற்கு வழங்கப்படுகிறது.

## (ii) உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்

**48.** உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அவர்களது ஓய்வூதியம் /

குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகளைக் களைவதற்கும் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதமின்றி உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் ஒன்று இயங்கி வருகிறது.

### (iii) நகராட்சி ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தை நிருவகித்தல்

**49.** அரசாணை நிலை எண்.**120,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**25.5.1999**–ன்படி, மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு **01.08.1999** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. 2015-2016ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் 2016 ஜுலை மாதம் வரை மருத்துவ நலத்திட்டத்தில் 585 கோரிக்கைகள் ஏற்கப்பட்டு ரூ.176.83 இலட்சமும், குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தில் 159 கோரிக்கைகள் ஏற்கப்பட்டு ரூ.62.46 இலட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(iv) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நலம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தை நிருவகித்தல்**

**50.** அரசாணை நிலை எண்.23, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நாள்.15.03.2013-ன்படி, மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கு 01.04.2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. 2015-2016ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் 2016 ஜூலை மாதம் வரை மருத்துவ நலத் திட்டத்தில் 130 கோரிக்கைகள் ஏற்கப்பட்டு ரூ.27.83 இலட்சமும், குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டத்தில் 54 கோரிக்கைகள் ஏற்கப்பட்டு ரூ.18.90 இலட்சமும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(v) உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்**

**51.** அரசாணை நிலை எண்.260 நிதி (ஓ.கு.தீ)த் துறை, நாள்.15.10.2015-ன்படி, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் பங்களிப்பு

ஓய்வூதிய திட்டத் தணிக்கையினை மேற்கொண்டு சரியான முறையில் கணக்குகள் பராமரிக்கப்படுவதை உறுதி செய்து வருகிறார்.

## (vi) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்

**52.** உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும் அரசால் 1967ம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. அவர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளில் உள்ள இருப்புகளுக்கு, வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2015-2016ஆம் நிதியாண்டில் 18 கோடி ரூபாய் இதற்கென அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், மேற்காணும் ஒதுக்கீட்டுத் தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## (vii) அறக்கட்டளைகளின் நிருவாகம்

**53.** உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 01.04.1952 முதல் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். இதன்படி, இத்தகைய அறக்கட்டளைகளை அரசே ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை செயல்படுத்துகிறது. இந்த அறக்கட்டளை நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகை, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது, அறக்கட்டளை நிதிப் பொருளாளர் என்ற நிலையில் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரின் கட்டுப்பாட்டில் 15.20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 மத்திய அரசு அறக்கட்டளைகளும், 25.12 கோடி ரூபாய் மதிப்புள்ள 875 மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன. 2015-2016ஆம் நிதியாண்டில் அறக்கட்டளைகளின் வட்டி வருவாயிலிருந்து படிப்புதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்குவதற்காக 427 அறக்கட்டளைகளுக்கு 24.25 இலட்சம் ரூபாய் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**மின் ஆளுகை முயற்சிகள்**

**54.** எளிய மற்றும் வெளிப்படையான முறையில் மின்னணு மூலம் மாதாந்திர ஓய்வூதியம் 32,275 உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்குவதற்கு மென்பொருளை உருவாக்க 24.80 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு தற்போது இப்பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

**55.** தணிக்கைத் தொடர்பான திட்டமிடுதல், அட்டவணைப்படுத்துதல் மற்றும் தணிக்கை அறிக்கை தயார் செய்தல் ஆகிய முழுமையான செயல்பாடுகளை மேலாண்மை செய்ய வழிவகுக்கும் தணிக்கை தகவல் மேலாண்மை செயலாக்க திட்டம் (Audit Information Management System) விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இரண்டு கோடி ரூபாய் செலவினத்தில் இத்திட்டம் இருகட்டங்களாக அதாவது 2015-2016 மற்றும் 2016-2017ஆம் நிதியாண்டுகளில் செயல்படுத்தப்படும். முதற்கட்டப் பணிக்காக அரசாணை நிலை எண்.291, நிதி (கூ.த)த் துறை, நாள்.03.11.2015–ன் வாயிலாக அரசு 2015-2016ஆம் ஆண்டிற்காக ரூபாய் ஒரு கோடி நிதி ஒப்பளிப்பு செய்து

அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனை செயல்படுத்த ஒருங்கிணைப்பு துறையாக கூட்டுறவு தணிக்கைத் துறை நியமிக்கப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை நிலை**

**56.** 2013-2014ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுக்கணக்குகள் பெறப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள், 22 சதவீதம் கிராம ஊராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 2014-2015ஆம் ஆண்டுக்கான ஊராட்சி ஒன்றியங்கள், 22 சதவீதம் கிராம ஊராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின், 2014-2015ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை 31.10.2016-க்குள் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும் 2015-2016ஆம் ஆண்டுக்கான தணிக்கை டிசம்பர் 2016-க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை நிலை**

**57.** அண்ணா பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் மற்றும் டாக்டர்.அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தவிர ஏனைய **20** பல்கலைக்கழகங்கள் மற்றும் விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக குழுமங்கள் போன்ற ஏனைய நிறுவனங்களின் 2013-2014 ஆம் ஆண்டு வரையிலான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டுக்கான 12 பல்கலைக்கழங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய பல்வகை நிறுவனங்கள் மற்றும் 11 பல்கலைக்கழங்களின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான தணிக்கை 31.10.2016 க்குள் முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும் 2015-2016 ஆம் ஆண்டிற்கான தணிக்கை டிசம்பர் 2016க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தணிக்கைக் கட்டணம்**

**58.** பல்கலைக் கழகத் தணிக்கைக்கு 100 சதவீத தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50 சதவீத தணிக்கைச் செலவினம் தணிக்கைக்

கட்டணமாகவும், வேளாண் விற்பனை குழுக்கள் தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் இரண்டு சதவீதமும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2015-2016 ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் 2016 ஜுலை மாதம் வரை 1119.86 இலட்சம் ரூபாய் தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**மிகைக் கொடுப்பு பிடித்தம்**

**59.** நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் சார்பான தணிக்கைத் தடைகளை நீக்கும் பொருட்டு 2015-2016ஆம் நிதியாண்டு மற்றும் இந்நிதியாண்டில் 2016 ஜுலை மாதம் வரையிலான காலத்தில் கூடுதலாக வழங்கப்பட்ட 14.31 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு தணிக்கை**

**60.** சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் கல்விக் கட்டண தள்ளுபடி மற்றும் பிந்தைய கல்வி உதவி தொகை (Post Matric Scholarship) கோரிக்கைகளில் ஏதேனும் முறைகேடு

நடைபெற்றுள்ளதா என்பதனை கண்டறிவது குறித்து சிறப்புத் தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பணிகள் முடிவடைந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவு தணிக்கைத் துறை

**61.** சந்தானம் குழு மற்றும் நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி, கூட்டுறவுத் துறையின் தணிக்கைப் பிரிவானது, தனியாகப் பிரிக்கப்பட்டு, 17.06.1981 முதல் கூட்டுறவு தணிக்கைத் துறை, தனித் துறையாக செயல்பட்டு வருகிறது. 1983 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 80வது பிரிவின்படி, பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்த்து 14 நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

62. **கீழ்காணும் துறைகளின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்டவையாகும்**

| **தொடர் எண்** | **பதிவாளரின் பெயர்** | **கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|
| (i) | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 8649 |
| (ii) | கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் | 1401 |
| (iii) | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 306 |
| (iv) | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 932 |
| (v) | தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் | |
| (vi) | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்(வீட்டு வசதி) | 854 |
| (vii) | மீன் வளத் துறை இயக்குநர் | 1284 |
| (viii) | கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப்பணிகள் இயக்குநர் | 119 |
| (ix) | சர்க்கரைத் துறை ஆணையர் | 17 |
| (x) | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 82 |
| (xi) | வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர் | 122 |
| (xii) | பட்டுப்புழு வளர்ப்புத் துறை இயக்குநர் | 25 |
| (xiii) | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர் | 171 |
| (xiv) | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் | 55 |
| | **மொத்தம்** | **14017** |

## கூட்டுறவு தணிக்கைத் துறையின் நோக்கம்

**63.** கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சரிபார்த்தல், அச்சங்கங்களின் இருப்பு நிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்ட கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதும் கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணிகளாக உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள், அதற்கான சட்டம், விதி, நடைமுறைகள் ஆகியவற்றின்படி செயல்படுவதை கண்காணிக்க சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவு தணிக்கை உதவியாக இருந்து வருகிறது. மேலும் அரசின் நிதியுதவி எதன்பொருட்டு எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் பெறுவதை உறுதி செய்கிறது.

## நகர வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்

**64.** முனைவர் வைத்தியநாதன் குழுவின் அறிக்கையை செயல்படுத்திய பின்னர், 2009 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகளின் தணிக்கையும், இந்திய மைய வங்கியின் பரிந்துரையின்படி 25 கோடி ரூபாய்க்கு மேல் வைப்பீட்டு தொகைகளை கொண்டுள்ள நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வமான தணிக்கைகளும், பட்டய கணக்கர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன் நிகழ் தணிக்கைப் பணிகள் மட்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## சட்டமுறை தணிக்கை (Statutory Audit)

**65.** சிறிய அளவிலான பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை, தொடர் தணிக்கை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 45 நாட்களுக்குள் முடிக்கப்பெற வேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கென தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது.

2015-2016 ஆம் ஆண்டில் தணிக்கைக் கட்டணமாக 3.53 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டுள்ளது. அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில் தணிக்கை வழக்கமான முறையில் மேற்கொள்ளப்பட்டு அதற்கான கட்டணம் அடிப்படைவிதி 127-ன் கீழ் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. அடிப்படை விதி 127-ன்கீழ், 2015-2016ஆம் ஆண்டில் தணிக்கை மேற்கொண்ட வகையில் பணியாளர்களின் செலவினத் தொகையாக 10.11 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

**தணிக்கை முன்னேற்ற நிலை**

**66.** கடந்த ஆண்டுகளின் தணிக்கை நிலுவை விவரம் பின்வருமாறு:

| **தொடர் எண்** | **வருடம்** | **நிலுவையிலுள்ள சங்கங்கள்** |
|---|---|---|
| (i) | 2010-2011 | 489 |
| (ii) | 2011-2012 | 632 |
| (iii) | 2012-2013 | 784 |
| (iv) | 2013-2014 | 946 |
| (v) | 2014-2015 | 1209 |

**67.** நிலுவையிலுள்ள மேற்கண்ட கூட்டுறவு சங்கங்களின் தணிக்கைக்குரிய பதிவேடுகள் நீதிமன்றம், விசாரணை அலுவலர் மற்றும் வணிக குற்றப் புலனாய்வு துறையினரிடம் உள்ளதால் மேற்கண்ட சங்கங்களின் தணிக்கையை முடிக்க இயலாத நிலை உள்ளது. இப்பதிவேடுகள் கிடைக்கப்பெற்றவுடன் தணிக்கை முடிக்கப்படும்.

**68.** 2015-2016ஆம் நிதியாண்டிற்கான தணிக்கையினை பொறுத்தவரை மொத்தமுள்ள 14017 நிறுவனங்களில் 31.07.2016 வரையிலான காலத்தில் 3925 கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 10092 கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை டிசம்பர் 2016க்குள் முடிக்கப்படும்.

**சிறப்பு அறிக்கைகள்**

**69.** தணிக்கையில் கடுங்குறைகள் காணும்போது அது தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கிய சிறப்பு அறிக்கைகள் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. 2015-2016-ஆம்

ஆண்டில் 36.27 கோடி ரூபாய் அளவிலான 353 சிறப்பு அறிக்கைகளும் இந்நிதியாண்டில் 31.07.2016 வரையிலான காலத்தில் 4.86 கோடி ரூபாய் அளவிலான 125 சிறப்பு அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

**மின் ஆளுகை வாயிலாக தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு (Audit Information Management System)**

**70.** மின் ஆளுகை வாயிலாக "தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு" திட்டத்தினை கூட்டுறவு தணிக்கைத் துறை மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையில் இருகட்டங்களாக அதாவது 2015-2016 மற்றும் 2016-2017ஆம் நிதியாண்டுகளில் செயல்படுத்த இரண்டு கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட பணிகளுக்காக அரசாணை நிலை எண்.291, நிதி (கூத)த் துறை, நாள்.03.11.2015இல் அரசு, 2015-2016ஆம் நிதியாண்டிற்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த முயற்சியானது தணிக்கையாளர்களை கணினி பயன்பாட்டுடன் கூடிய தணிக்கைப் பணி மேற்கொள்ள ஏதுவான சூழலை உருவாக்கும். இதனை செயல்படுத்தும்பொருட்டு மென்பொருள் வடிவமைப்பதற்கு

தேவையான செயல்முறை திட்டமானது “தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவன” முகவரிடம் ஒப்படைக்கப்பட்டு இப்பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

**இரண்டு புதிய கூட்டுறவு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் உருவாக்குதல்**

**71.** இத்துறையின் மூலமாக தணிக்கைப் பணிகளைச் சிறப்பாக செய்யும் வகையில் புதியதாக சேலம் மற்றும் விழுப்புரத்தினை தலைமையிடமாகக் கொண்டு இணை இயக்குநர் பணியிடத்துடன் கூடிய புதிய இரண்டு மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் உருவாக்க அரசாணை நிலை எண்.42, நிதி (கூத)த் துறை நாள்:10.02.2016-ன்படி அரசால் ஆணையிடப்பட்டு மேற்படி இரண்டு மண்டல அலுவலகங்கள் 01.03.2016 முதல் செயல்பட்டு வருகின்றன.

**தணிக்கையாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி**

**72.** தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரத்தை மேம்படுத்த பல்வேறு வகையான பயிற்சிகளும், புத்தாக்கப் பயிற்சிகளும் வருடந்தோறும் அளிக்கப்பட்டு வருகிறது.

# சிறு சேமிப்புத் துறை

**73.** சிறுசேமிப்பு, பொதுமக்களிடம் உபரியாக உள்ள பணத்தினை சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு ஒரு முக்கிய கருவியாக விளங்குகிறது. இத்திட்டங்கள் அதிக பாதுகாப்பானதாகவும், கணிசமான வட்டியுடன் திரும்பக் கிடைக்க கூடியதாகவும் உள்ளன. மத்திய அரசின் நிதி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டு அஞ்சலகங்கள் மூலமாக சிறுசேமிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத்தில் திரட்டப்படும் மாதாந்திர நிகர சிறுசேமிப்பு வசூலில் **50** சதவீதம், அந்தந்த மாநிலத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு நீண்டகாலக் கடனாக 01.04.2016 முதல் 8.8 சதவீத ஆண்டு வட்டி விகிதம் அடிப்படையில் மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

**சிறுசேமிப்புத் திட்டங்கள்**

**74.** சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் பயனளிக்கும் வகையில் பல சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. 01.04.2016 முதல் மத்திய அரசு,

சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்களை கீழ்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது.

| தொடர் எண் | திட்ட விவரம் | 01.04.2014 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%) | 01.04.2015 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%) | 01.04.2016 முதல் வட்டி விகிதங்கள் (%) |
|---|---|---|---|---|
| (i) | அஞ்சலக சேமிப்பு கணக்கு (POSA) | 4.0 | 4.0 | 4.0 |
| (ii) | **கால வைப்பீடு** | | | |
| | 1 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.4 | 8.4 | 7.1 |
| | 2 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.4 | 8.4 | 7.2 |
| | 3 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.4 | 8.4 | 7.4 |
| | 5 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD) | 8.5 | 8.5 | 7.9 |

| தொடர் எண் | திட்ட விவரம் | 01.04.2014 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%) | 01.04.2015 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%) | 01.04.2016 முதல் வட்டி விகிதங்கள் (%) |
|---|---|---|---|---|
| (iii) | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD 5 ஆண்டுகள்) | 8.4 | 8.4 | 7.4 |
| (iv) | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS- 5 ஆண்டுகள்) | 9.2 | 9.3 | 8.6 |
| (v) | அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் (POMIS) | 8.4 (5 ஆண்டுகள்) | 8.4 (5 ஆண்டுகள்) | 7.8 (5 ஆண்டுகள்) |
| (vi) | தேசிய சேமிப்புப் பத்திரம் (NSC-VIII வது வெளியீடு) | 8.5 (5 ஆண்டுகள்) | 8.5 (5 ஆண்டுகள்) | 8.1 (5 ஆண்டுகள்) |
| (vii) | 10 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் (NSC IX வது வெளியீடு) | 8.8 | 8.8 | 20.12.2015 முதல் திட்டம் நிறுத்தப்பட்டது |

| தொடர் எண் | திட்ட விவரம் | 01.04.2014 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%) | 01.04.2015 ஆம் நாளிலிருந்து வட்டி விகிதங்கள் (%) | 01.04.2016 முதல் வட்டி விகிதங்கள் (%) |
|---|---|---|---|---|
| (viii) | பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்/பொன் மகன் பொது வைப்பு நிதி (PPF -15 ஆண்டுகள்) | 8.7<br><br>(ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1.5 இலட்சம்) | 8.7<br><br>(ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1.5 இலட்சம்) | 8.1<br><br>(ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1.5 இலட்சம்) |
| (ix) | கிசான் விகாஸ் பத்திரம் (KVP) | 8.7<br><br>(100 மாதங்களில் பணம் இரட்டிப்பாகும்)<br><br>(19.11.2014 முதல்) | 8.7<br><br>(100 மாதங்களில் பணம் இரட்டிப்பாகும்) | 7.8<br><br>(110 மாதங்களில் முதிர்வடையும்) |
| (x) | சுகன்யா சம்ரிதி கணக்கு வைப்புத் திட்டம் (செல்வ மகள் சேமிப்புத் திட்டம்) | 9.1 | 9.2 | 8.6 |

**செல்வமகள் சேமிப்புத் திட்டம்**

**75.** மத்திய அரசு, செல்வமகள் சேமிப்புத் திட்டம் என்ற சேமிப்புத் திட்டத்தை குறிப்பாக பெண் குழந்தைகளுக்காக 03.12.2014 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கான வட்டி விகிதம், 01.04.2016 முதல் 8.6 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 10 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் ஆண்டுக்கு 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம்.

**பொன் மகன் பொது வைப்பு நிதி**

**76.** பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்பு திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பை அடுத்து, ஆண் குழந்தைகள் பயன் பெறும் வகையில் மத்திய அரசின், பொது வருங்கால வைப்பு நிதித்திட்டம் (PPF), 4.9.2015 முதல் இந்திய அஞ்சல் துறை மூலம், ‘பொன் மகன் பொதுவைப்பு நிதி’ என பெயரிடப்பட்டு துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் மூலமும், 10 வயதிற்கு மேற்பட்டவர்கள் தாங்களாகவும் ஓர் ஆண்டில் 1.5 லட்சம் ரூபாய் வரை

வைப்பீடு செய்யலாம். இத்திட்டத்திற்கு 1.4.2016 முதல் வட்டி விகிதம் 8.1 சதவீதமாக உள்ளது.

**சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்**

77. 2005-2006 முதல் 2015-2016 வரையிலான நிதியாண்டுகளில் சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாக தமிழகத்தில் திரட்டப்பட்ட நிதி வசூல் விவரங்கள் வருமாறு:—

**ரூபாய் கோடியில்**

| தொடர் எண் | ஆண்டு | நிகர இலக்கு | மொத்த வசூல் | நிகர வசூல் |
|---|---|---|---|---|
| (i) | 2005-2006 | 5000 | 12455.75 | 5594.13 |
| (ii) | 2006-2007 | 5700 | 10158.54 | 2637.25 |
| (iii) | 2007-2008 | -- | 7791.11 | -965.98 |
| (iv) | 2008-2009 | -- | 8486.64 | - 1216.73 |
| (v) | 2009-2010 | -- | 12113.39 | 1539.39 |
| (vi) | 2010-2011 | -- | 13414.56 | 516.32 |
| (vii) | 2011-2012 | -- | 10607.50 | -2100.74 |
| (viii) | 2012-2013 | -- | 9797.05 | -1506.83 |
| (ix) | 2013-2014 | -- | 9624.19 | -730.78 |
| (x) | 2014-2015 | -- | 10936.37 | -1084.12 |
| (xi) | 2015-2016 | -- | 17259.82 | 1945.41 |

**78.** 2015-2016ஆம் நிதி ஆண்டில் சிறுசேமிப்பு வசூல் கணிசமாக உயர்ந்துள்ளது. தமிழகமெங்கும் சிறுசேமிப்புத் திட்டங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறுசேமிப்பு முகவர்கள் மற்றும் முதலீட்டாளர்களின் நலனைப் பேணுவதிலும் சிறுசேமிப்பு இயக்குநரகம் முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களும், சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி ஆணையாளரும் சிறுசேமிப்புத் திட்டங்களை, பொது மக்களிடையே கொண்டு செல்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

**முகவரமைப்புக்கான மத்திய அரசின் தரகுத் தொகை மற்றும் மாநில அரசின் ஊக்கத்தொகை**

**79.** சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்காக மாநிலம் முழுவதிலும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள், சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 27,075 முகவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, 1.12.2011 முதல் அவர்களுக்குக் கீழ்காணும் வீதங்களில்

மத்திய அரசு மற்றும் மாநில அரசால் தரகு மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

| தொடர் எண் | முகவரமைப்பு வகை | சிறுசேமிப்புத் திட்டம் | சிறு சேமிப்பு முகவர்களின் மொத்த எண்ணிக்கை | மத்திய அரசின் ஆணைப்படி தரகுத் தொகை 1.12.2011 முதல் | மாநில அரசின் ஊக்கத் தொகை 31.3.2012 வரை |
|---|---|---|---|---|---|
| அ. | நிலைப்–படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | அஞ்சலக மாத வருவாய் திட்டம் (POMIS), தேசிய சேமிப்பு பத்திரம் (NSC), அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் (1, 2, 3 மற்றும் 5 ஆண்டுகள்) (POTD) | 6266 | 0.5 % | 0.5 % |
| | | கிசான் விகாஸ் பத்திரம் (KVP) (19.11.2014 முதல் இந்திய அரசால் மீண்டும் அறிமுகப்–படுத்தப்பட்டது) | | 15.7.2015 முதல் 0.5% லிருந்து 1% ஆக உயர்த்தப்–பட்டுள்ளது | |

| தொடர் எண் | முகவரமைப்பு வகை | சிறுசேமிப்புத் திட்டம் | சிறு சேமிப்பு முகவர்களின் மொத்த எண்ணிக்கை | மத்திய அரசின் ஆணைப்படி தரகுத் தொகை 1.12.2011 முதல் | மாநில அரசின் ஊக்கத் தொகை 31.3.2012 வரை |
|---|---|---|---|---|---|
| ஆ. | மகளிர் முகவர் திட்டம் (MPKBY) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் (PORD) | 20603 | 4% | 2% |
| இ. | அனுமதி–யளிக்கப்பட்ட முகவர்களின் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் / பொன் மகன் பொது வைப்பு நிதி (PPF) | பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் (PPF) | 206 | -- | -- |
| **மொத்தம்** | | | **27,075** | | |

**80.** மேற்கண்டவற்றில் மகளிர் முகவர் திட்டத்தின் கீழ் மட்டும் அஞ்சலக தொடர் வைப்புத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து மகளிர் மட்டுமே சிறுசேமிப்பு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்கு 31.03.2012 வரையில்

முகவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க மாநில அரசு அனுமதித்துள்ளது.

**விளம்பரம்**

**81.** பொது மக்களிடையே, சிறுசேமிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்டங்களில் ஒன்றிய அளவில் நாடகங்களை நடத்தியும் அரசு நடத்தும் பொருட்காட்சிகளில் மாவட்ட அளவில் சிறுசேமிப்பு அரங்கு அமைக்கப்பட்டும் சென்னையில் உள்ள வர்த்தக கண்காட்சிகளில் துண்டு பிரசுரங்கள் வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

**வெகுமதிகள்**

**82.** சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் “திறமையான மகளிர் முகவர்கள்” (MPKBY), மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறந்து விளங்கும் நிலை முகவர்கள் (SAS) மற்றும் சம்பளப்பட்டியல் சேமிப்பு திட்ட குழும தலைவர்கள் (PRSS),

ஆகியோருக்கு வெகுமதிகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

## அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

**83.** நிதி தொடர்பான தகவல்களை மிகவும் அர்த்தமுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும், மாநிலத்தின் கணக்குகளை மின்னணுத் தகவல் செயலாக்க உபகரணங்கள் மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பான முறையில் வரவு செலவுத் திட்டமிடும் நோக்குடன், 1971ஆம் ஆண்டு மத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு தோற்றுவித்தது. இந்த மின்னணு தகவல் செயலாக்க உபகரணங்களை பயன்படுத்தி, அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாட்டுத் தேவைகளை தொகுக்கும் வகையில், அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிருவாக வசதிகளுக்காக 1975ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்த மையம் கீழ்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

(i) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள்

(ii) இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத் தேர்வுகளுக்கான விடைத்தாள்களுக்கு முகப்புத் தாள்கள் அச்சடித்தல்

(iii) பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்

(iv) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்

**தேர்வுப் பணிகள்**

**84.** அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் தேர்வு முடிவுகளை தொகுக்கும் பணிகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**85.** அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் கீழ்கண்ட தேர்வுகளின் முடிவுகளைத் தொகுக்கும் பணியினை மிகுந்த

கவனத்துடனும், துல்லியமாகவும் மேற்கொண்டு வருகிறது. முந்தைய கல்வி ஆண்டில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் மேற்கொண்ட பணிகளின் விவரம் பின்வருமாறு :–

| **தேர்வுப் பணிகள்** | **மார்ச் 2015** | **சிறப்பு துணைத் தேர்வு 2015** | **அக்டோபர் 2015** | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| மேல்நிலைப் பள்ளித் தேர்வு | 843044 | 68941 | 33694 | 945679 |
| பத்தாம் வகுப்பு தேர்வு | 1073011 | 64427 | 36527 | 1173965 |
| எட்டாம் வகுப்பு தேர்வு | 16531 | | | 16531 |
| ஆசிரியர் கல்வி பட்டயப்படிப்பு தேர்வு | 38095 | | | 38095 |
| தொழில்நுட்பத் தேர்வு | 13420 | | | 13420 |
| **பெருமொத்தம்** | **1984101** | **133368** | **70221** | **2187690** |

**விடைத்தாள்களுக்கு முகப்புத்தாள் அச்சடித்தல்**

**86.** உயர்நிலை மற்றும் மேல்நிலை பொதுத் தேர்வுகளுக்கான முகப்புத்தாள்களை அச்சிடும் பணி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மார்ச் / ஏப்ரல் 2016 உயர்நிலை மற்றும் மேல்நிலை பொதுத் தேர்வுகளுக்கான 1.413 கோடி முகப்புத் தாள்களை அச்சிட்டு வழங்குவதற்காக அரசு ரூபாய் 84,65,040/-க்கு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

**பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட விபரங்களை தொகுத்து பராமரித்தல்**

**87.** ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் / அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள் / நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம் சார்ந்த தகவல்கள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநிலக் கணக்காயர் அலுவலகத்தால் பராமரிக்கப்பட்டு வந்த அரசுத்துறை பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டப் பணிகள் 2013-2014 நிதியாண்டிலிருந்து அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை 4,44,639 பணியாளர்களுக்கு கீழ்கண்டவாறு பங்களிப்பு ஓய்வூதிய குறியீட்டு எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | துறைகள் | இதுவரை வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள் |
|---|---|---|
| (i) | அரசுப் பணியாளர்கள் | 3,26,151 |
| (ii) | அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியம் / நகராட்சிப் பள்ளிகளின் பணியாளர்கள் | 91,513 |
| (iii) | உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்கள் | 26,833 |
| (iv) | அனைத்திந்தியப் பணி அலுவலர்கள் | 142 |
| | **மொத்தம்** | **4,44,639** |

**88.** அரசுப் பணியாளர்கள்/அரசு நிதி உதவி பெறும் நிறுவனங்கள்/ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் அனைத்திந்தியப் பணி அலுவலர்களாகிய 3,49,687 சந்தாதாரர்களுக்கு, 2014-2015ஆம் ஆண்டிற்கான கணக்குத்தாள்கள் வழங்கப்பட்டுள்ளன. இதர சந்தாதாரர்களுக்கும் 2014-2015ஆம் ஆண்டுக்கான கணக்குத்தாள்கள் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**89.** 2015-2016ஆம் ஆண்டிற்கான அனைத்திந்தியப் பணி அலுவலர்களுக்கான கணக்கு விவர சீட்டு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. ஏனைய அரசுப்பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதிய திட்டக் கணக்கு விவர சீட்டுகளும் (Account Slip) விரைவில் இணையதளத்தில் வெளியிடப்படவுள்ளது.

**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி**

**90.** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணியாளர்களின் பொது வருங்கால வைப்பு நிதியை பராமரிக்கும் பணி அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண்.53, சமூக நலம் மற்றும் சத்துணைவுத் திட்டத் துறை, நாள் 20.7.2015–ல் இத்திட்டத்திற்கான வழிகாட்டு வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தில் இதுநாள் வரை 1,82,747 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட

பணியாளர்களிடமிருந்தும் ஆகஸ்ட் 2015 முதல் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுகிறது. வரவினப் பட்டியல்கள் மாதந்தோறும் அனைத்து மாவட்ட கருவூலங்களிலிருந்து பெறப்பட்டு தகவல் பதிவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத்துறை

**91.** அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறை உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, 1969 முதல் இயங்கி வருகிறது. அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகளுடன், பல்வேறு சட்டவரையறைக்கு உட்பட்ட வாரியங்கள் (Statutory Boards) மற்றும் சட்டவரையறைக்கு உட்படாத (Non-Statutory) நிறுவனங்களின் தணிக்கை இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பின்வரும் வாரியங்கள் மற்றும் நிறுவனங்களின் தணிக்கை, அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சட்டப்படியான நிறுவனங்களின் தணிக்கை**

| தொடர் எண் | நிறுவனத்தின் பெயர் | தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| (i) | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 2014-2015 |
| (ii) | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 2014-2015 |
| (iii) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 2014-2015 |
| (iv) | சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 2014-2015 |
| (v) | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | 2014-2015 |

**92.** மேலே தெரிவிக்கப்பட்டுள்ள சட்டப்படியான வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

**சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் தணிக்கை**

**93.** கீழ்க்கண்ட சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் துறைத் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| **தொடர் எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **எண்ணிக்கை/ நிறுவனங்கள்** |
|---|---|---|
| (i) | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 96,740 |
| (ii) | வேளாண்மை விரிவாக்க மையங்கள் | 874 |
| (iii) | எடைகள் மற்றும் அளவைகள் நிறுவனங்கள் | 311 |
| (iv) | ஆண்டிற்கு ரூ.0.20 இலட்சத்திற்கு மேல் தொடர் மானியம் மற்றும் ரூ.1.20 இலட்சத்திற்கு மேல் தொடரா மானிய உதவி பெறும் நிறுவனங்கள் | 685 |

**94.** இத்துடன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர் நலவாரியம் மற்றும் நாட்டுப்புற கலைஞர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியம், ஏனைய **15** அமைப்பு

சாரா தொழிலாளர் நல வாரியங்கள் மற்றும் ஏனைய பல்வகை நிறுவனங்களின் தணிக்கைகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**தணிக்கைச் சான்று**

**95.** மேலும், தணிக்கைக்குட்பட்ட சில நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களின் வருங்கால வைப்புநிதிக் கணக்கு முடிப்புகளுக்கான கருத்துருக்களுக்கு சான்றளிப்பதுடன் மானிய உதவிபெறும் நிறுவனங்களுக்கு, மானியத் தகுதிச் சான்று இத்துறையால் வழங்கப்பட்டு வருகிறது.

**ஏனைய பணிகள்**

**96.** அரசின் குறிப்பிட்ட ஆணைகளின்படி 14 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையின் உதவி இயக்குநர்கள் / ஆய்வாளர்கள் நிலையில் உள்ள அலுவலர்களால் மேற்பார்வையிடப்பட்டு அத்தகைய தணிக்கை தொடர்பான அறிக்கைகள் அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

**97.** மேலும், கீழ்காணும் தணிக்கை பணிகள் மற்றும் ஏனைய பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

(i) நிகர் நிலைப் பல்கலைக் கழகங்களின் நாட்டு நலப்பணித் திட்டம், தமிழ்நாடு அரசு மருத்துவ நல நிதித் திட்டம், குடும்ப பாதுகாப்பு நிதி மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி ஆகியவற்றின் கணக்குகளின் தணிக்கை.

(ii) அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், அரசு உதவி பெறும் பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளின் கணக்குகள் தணிக்கை.

(iii) அனைத்து அரசுப் பணியாளர்களின் ஊதிய நிர்ணய தணிக்கை.

(iv) அரசுத் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட கணக்குகளின் தணிக்கை.

**தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை**

**98.** தணிக்கையின் போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் மாதந்தோறும் தொகுக்கப்பட்டு திருத்த நடவடிக்கைக்காக அந்தந்த துறைத் தலைவருக்கும் மற்றும் அரசின் துறைச் செயலாளரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

**தணிக்கைக் கட்டணங்கள்**

**99.** சட்டப்படியான வாரியங்களின் தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கைப் பணியாளர்களின் சம்பளச் செலவின அடிப்படையிலும், வக்ஃபு நிறுவனத்தின் நிகர வருவாயில் 1.5 சதவீதமும் தணிக்கை கட்டணமாக இத்துறையால் வசூலிக்கப்பட்டு, அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

**சிறப்புத் தணிக்கை**

**100.** அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு நெறிமுறைகளுக்கு புறம்பான முறையில் அனுமதிக்கப்பட்ட பணி மேம்பாட்டு ஊதியம் (career advancement scheme),

வேறு துறையில் பெறப்பட்ட முனைவர் (Ph.D.) மற்றும் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) பட்டத்திற்கு ஊக்க ஊதிய உயர்வு மற்றும் வேறு துறையிலுள்ள இளையோரை காட்டி மூத்தோருக்கு வழங்கிய ஊதிய நிர்ணயத்தினை சிறப்பு தணிக்கை செய்ய இத்துறையிடம் அரசு ஒப்படைத்துள்ளது. இது தொடர்பாக மேற்கண்ட தணிக்கையின் முதற்கட்ட அறிக்கையினை உயர்கல்வித் துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**ஓ. பன்னீர்செல்வம்**
நிதி, பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்தத் துறை அமைச்சர்